**எம்பிலிபிட்டிய பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 18 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 9,843,880 ஆக இருந்த போதிலும், அது ரூபா 9,531,393 ஆக கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 312,487 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஆதனவரி வருமானம் ரூபா 58,080 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 262,110 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 05 கணக்கு விடயங்களுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 1,532,385 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 03 கணக்கு விடயங்களுக்குரிய ஆண்டின் உள்ளபடியான செலவினத்தை திரண்ட செலவினப் பொழிப்பு மற்றும் கடன்கொடுத்தோர் பொழிப்புடன் ஒப்பீடு செய்த போது ரூபா 311,329 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) ஊழியர் பிணை வைப்பு கணக்கிற்கும் ஊழியர் வைப்பு முதலீட்டுக் கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 98,996 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 இணங்காமைகள்

#### 1.3.3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1988 ஆம் ஆண்டு முதுல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 37 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,725,432 கூட்டுத்தொகையான முற்பணம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,488,345 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,706,045 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,245,764 | 6,585,755 | 8,256,303 | 4,292,981 | 3,168,764 | 6,450,263 | 5,349,156 | 5,728,549 |
| வாடகை | 9,564,107 | 9,642,798 | 10,252,848 | - | 8,129,290 | 9,690,500 | 9,422,490 | 604,800 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,191,000 | 2,255,312 | 1,802,712 | 460,600 | 1,381,500 | 1,473,850 | 1,463,850 | 10,000 |
| ஏனைய வருமானம் | 12,575,570 | 20,153,129 | 16,991,974 | 17,148,428 | 10,987,550 | 15,048,906 | 8,164,206 | 14,846,953 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை, சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வீதவரியும் வரியும், வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் பிடியாணைக் கட்டணமும் நீதிமன்றத் தண்டப்பணமும் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 57 சதவீதம்,

07 சதவீதம், 51 சதவீதம், 04 சதவீதம், 03 சதவீதம் மற்றும் 85 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் அரசாங்கத்தின் பங்களிப்பு வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவை விஞ்சி 30 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2.3 ஆதன வரி

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 1,866,729 ஆக இருந்ததுடன் அதில் 05 வருடங்களை விஞ்சிய காலத்திலிருந்து கொண்டுவரப்படும் 409 அலகுகளிலிருந்து அறவிட வேண்டியதாக ரூபா 341,497 கூட்டுமொத்தமாகக் காணப்பட்டது. நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான செயற்படுநிலை நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் முதலாவது காலாண்டில் 187 வியாபார நிறுவனங்களும் ஏப்ரல் முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் 317 வியாபார நிலையங்களும் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 23 மாத்திரமாக இருந்தது.

### 2.2.5 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான கால எல்லையில் நீர் வசதிகள் துண்டிக்கப்பட்ட நுகர்வோர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,353,906 கூட்டுத்தொகையான நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தற்போதுள்ள நுகர்வோரிடமிருந்து ரூபா 575,597 கூட்டுமொத்தமான நீர்க்கட்டணம் அறவிட வேண்டிக் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் 05 நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 57,000 கூட்டுத்தொகையான தொலைபேசி சமிக்ஞை கோபுர கட்டணத்தை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 452,600 தொகையான அறிவித்தல் பதாதைக் கட்டணத்தை அறவிடுதல் தொடர்பாக சபை போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஒக்தோபர் முதல் 2017 திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்குரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 11,090,647 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு 2018 மார்ச் வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2016 சனவரி முதல் 2017 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிடப்பட வேண்டிய ரூபா 5,111,436 கூட்டுதொகையான முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு 2018 மார்ச் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்களின் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவை மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நலன் விவகாரம், வசதிகள் மற்றும் நலன்புரிகள் போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் சேகரிக்கப்படுகின்ற உக்கும் மற்றும் உக்காத கழிவுப் பொருட்கள் வேறு பிரிக்கப்படாமல் சந்திரிக்கா குளத்திற்கு 01 கிலோ மீற்றர் அளவிலான தூரத்தில் அமைந்துள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான வெற்றுக் காணியில் அகற்றப்பட்டிருந்தது.

(ii) கலி பவுசரின் கழிவுகள் சனநடமாற்றமற்ற வெற்றுக் காட்டிலுள்ள நிலத்தில் முறையற்ற வகையில் அகற்றப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டு அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிவிக்காமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### பராமரிப்பு மற்றும் கழுதுபார்த்தல் இடம்பெறாமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 மே 06 ஆந் திகதி முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த கெப் வண்டியொன்று பழுதுபார்த்தலுக்காக அனுப்புவதற்கு 2017 பெப்ரவரி 16 ஆந் திகதி வரையிலும் தாமதமாகியிருந்ததுடன் 2018 ஏப்ரல் வரையிலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பழுதுபார்த்தலுக்காக 2016 ஆம் ஆண்டின் போது டிமோ நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த டபள் வைப்ரேட்டிங் உருளையும் 2018 ஏப்ரல் வரையிலும் பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 1,352,500 கூட்டுத்தொகையான 02 வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத டேலர் என்பவற்றை தேவையான பழுதுபார்த்தலை மேற்கொண்டு செயற்படுநிலைக்கு கொண்டுவருவதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 பெறுகைகள்

### 3.3.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையினால் அமுல்படுத்தப்பட்ட 04 வேலைகளுக்குரியதாக நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 482,059 தொகை செலுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) பனாமுற அலிமங்கட வீதியின் அகலம் 03 மீற்றராகவும் நீளம் 249 மீற்றராகவும் காண்பிக்கப்பட்டு கொங்கிறீட் இடுவதற்காக ரூபா 1,911,704 செலுத்தப்பட்டிருந்த போதிலும், வீதியின் உள்ளபடியான நீளம் 237.8 மீற்றர் மாத்திரமாக இருந்தமையால் நிறைவேற்றப்படாத 11.2 மீற்றருக்காக ரூபா 85,988 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை.

(ii) கந்துறுகஸ்ஆற ஹல்மில்லகெட்டிய வீதி அபிவிருத்தி வேலையின் I ஆவது பகுதியின் கீழ் வீதியின் நீளம் 167 மீற்றர் எனக் காண்பித்து அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,848,698 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், வீதியில் உள்ளபடியான நீளம் 157.3 மீற்றர் மாத்திரம் ஆனமையால் நிறைவேற்றப்படாத 9.7 மீற்றர் நீளத்திற்காக ரூபா 107,379 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை.

(iii) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 528,875 தொகையான பள்ளேபெத்த உப அலுவலகத்தின் கூரையை அமைக்கும் நிர்மாணத்தின் 04 வேலை விடயங்களுக்குரியதாக கூட்டுமொத்தமாக ரூபா 96,104 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை.

(iv) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,926,102 தொகையான மடுவன்வெல கிராம சேவையாளர் பிரிவில் சனசமூக மண்டபத்தின் மிகுதி வேலையைப் பூர்த்தி செய்யும் நிர்மாணத்தின் 02 வேலை விடயங்களுக்குரியதாக கூட்டுமொத்தமாக ரூபா 192,588 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையின் கீழ் அமுல்படுத்தப்பட்ட வீதிகளுக்குக் கொங்கிறீட் இடும் 11 வேலைகளுக்காக வீதியோரங்களை நிரப்புவதற்காக வெளியிலிருந்து மண் போக்குவரத்துச் செய்வதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 620,038 தொகையும், செப்பனிடுவதற்கான உருளையை போக்குவரத்துச் செய்வதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 68,500 தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வீதியை பௌதீக ரீதியில் பரீட்சித்த போது வீதி ஓரங்களுக்காக அந்த இடங்களில் மண் இடப்பட்டிருந்ததுடன் அவை செப்பனிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கூட்டுமொத்தமாக ரூபா 688,538 தொகை நிறைவேற்றப்படாத வேலைக்காக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பதவியணியனர்கள் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைப்பதற்காக சபை வளவில் கராஜொன்றை நிர்மாணித்தல் நேர் ஊழிய அடிப்படையின் கீழ் நிறைவேற்றுவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2015 திசெம்பர் 15 ஆந் திகதி ரூபா 148,352 தொகை செலவில் நிர்மாணப் பொருட்களை கொள்வனவு செய்து தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 மே வரையிலும் கராஜ் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 12 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,230,000 தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 18 செலவின விடயங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 12,870,765 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான செலவினம் ரூபா 21,887,622 ஆனமையால் அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டை விஞ்சி கூட்டுமொத்தமாக ரூபா 9,016,857 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்து அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) செலவினங்கள் இனங்காணப்படாமை |
| | (ii) வருமானங்கள் குறைத்து பதிவு செய்யப்பட்டமை |
| | (iii) பேரேட்டுக் கணக்குகள் பட்டோலைகளுடன் இணங்காமை |
| | (iv) செலவின பேரேடுகள் நிதிக்கூற்றுக்களுடன் இணங்காமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) சொத்துக்களின் பயன்பாடு | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை |

| | | |
|---|---|---|
| (ஈ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | முறையான வகையில் அகற்றப்படாமை |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | நிறைவேற்றப்படாத பணிகளுக்காக கொடுப்பனவு செய்தமை. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை<br>(ii) மிகைச் செலவினங்களை செய்ய வேண்டியிருந்தமை. |